**மினிபே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்நிதிக்கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2018 ஜுலை 11 திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மினிபே பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபளிக்கிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) புரநெகும கருத்திட்டத்தினால் மினிபே பிரதேச சபை அலுவலகத்திற்கு அன்பளிப்பு செய்திருந்த ரூபா 1,358,902 ஆன தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 2,707,164 பெறுமதியான தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புரநெகும கருத்திட்டத்தின் கீழ் அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளர் பெயரில் பேணப்பட்ட பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 383,870.30 தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான 2 நீர் உத்தேசத் திட்டங்களின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 2,114,719 பெறுமதியான தொகையை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) வேலைக் கடன்கொடுனர் ரூபா 216,000 இனால் குறைத்து காணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) வேலைக் கடன்படுனர் மீதி ரூபா 246,788 கூடுதலாக காணக்கிடப்பட்டிருந்தது.

#### 1.3.2 எதிர்பாராத பொறுப்புகள்

கடையறை வாடகை செலுத்தாத காரணத்திற்காக 20 கடை உறிமையாளர்களுக்கு எதிராக சபை மூலம் தாக்கல் செய்யப்பட்ட 20 வழக்குகள் மற்றும் ஓர் டிரக் வண்டி தொடர்பாக விசாரிக்கப்படும் வழக்குகள் பற்றி கணக்குகளில் காட்டப்படவில்லை.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய 7 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 22,533,012 ஆனது. அது தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ஓராண்டு காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,418,983 ஆக இருந்தன.

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய 3 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 19,733,474 ஆனது. அது தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ஓராண்டு காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 4,619,945 ஆக இருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 77,260,873 ஆன 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தன.

**1.3.5 இணங்காமை சந்தர்ப்பங்கள்**

---

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மாங்களுடன் இணங்காமை**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மாங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மாங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | ---------------------------------------------------- | -------------- | ----------------------- |
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 351,181 | காலாவதியான 7 வைப்புகளுக்குரிய பெறுமதியை தீர்ப்பதற்கு அல்லது அரச வருமாத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | | | |
| (ஆ) | 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/3 கொண்ட மத்திய உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் | | |
| | (i) 10 ஆம் பந்தி | | கடை அறைகளை உப குத்தகை வழங்கக்கூடாத போதும், குத்தகைகாரர்களால் 18 நபர்களுக்கு உப குத்தகை வழங்கப்பட்டிருந்ன. |
| | | | |
| | (ii) 12 ஆம் பந்தி | | ஒப்பந்த குத்தகைகாரருக்கு எவ்விதத்திலும் கடை அறைகளில் தோற்றத்தை மாற்றும் அதிகாரம் இல்லாததுடன், 05 கடைறைகளின் தோற்றம் மாற்றப்பட்டிருந்தன. |
| | | | |

**2. நிதி மீளாய்வு**

---

**2.1 நிதி விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 4,541,312 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,202,234 ஆனது.

2.2 வருமான நிருவாகம்
-------------------------------

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்
----------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டி தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| . | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை |
| ---------------------- | ------------------- | ---------------- | ------------------- | ------------------ | ------------------- | ------------------ | ------------------- | -------------------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை வாடகை | 553,942 | 592,883 | 484,918 | 441,988 | 583,942 | 543,881 | 460,005 | 341,174 |
| | | | | | | | | |
| வாடகை | 3,238,461 | 3,881,436 | 3,371,479 | 3,586,969 | 3,680,180 | 3,354,321 | 2,949,505 | 3,017,036 |
| | | | | | | | | |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,068,000 | 1,989,272 | 1,989,272 | - | 1,843,000 | 2,619,236 | 2,619,236 | - |
| | | | | | | | | |
| ஏனைய வருமானம் | 6,271,500 | 7,472,665 | 8,087,450 | 3,987,281 | 4,947,000 | 7,885,240 | 8,636,397 | 5,280,601 |
| | ------------------- | ------------------ | ------------------ | ------------------ | ---------------- | ----------------- | --------------- | --------------- |
| | 12,131.903 | 13,936,256 | 13,933,119 | 8,016,238 | 11,054,122 | 14,391,734 | 14,881,274 | 8,724,561 |
| | ========= | ======= | ======== | ======== | ========= | ========= | ======== | ======== |

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்
----------------------------------------------------------

(அ) சபைக்கு சொந்ததமான கடையறைகளின் உரிமையை தீர்த்துக் கொண்டு வாடகை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சபை அதிகார எல்லையிலுள்ள தனியார் நிருவனங்கள், உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களிலிருந்து குப்பை வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

2.2.3 வீத வரி மற்றும் வாடகை
-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவை வீத வரி வாடகை ரூபா 341,174 ஆனதுடன், ஆண்டினுள் அவற்றிலிருந்து ரூபா 32,027 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபை அதிகார எல்லையினுள் வித வரி அறவிட வேண்டிய அரச நிருவனங்களிலிருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் ரூபா 31,684 ஆன வீத வரி வாடகை மீதியொன்று அறவிடப்படவில்லை.

**2.2.4 வாடகை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவை மீதி ரூபா 3,380,147 மற்றும் ஆண்டின் பில் இடப்பட்ட ரூபா 1,230,866 ஆனது. அவற்றில் ஆண்டினுள் நிலுவையிலிருந்து ரூபா 104,170 மற்றும் பில் இடப்பட்டலிருந்து ரூபா 557,772 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன.

(ஆ) ஹசளக நகரில் நீதிமன்ற கட்டிடத்தொகுதி ஒன்றை நடாத்திச் செல்ல வழங்கப்பட்ட கட்டிடத்திலிருந்து பெறவேண்டிய ரூபா 103,500 தொகையினை 20 வருடங்கள் கடந்திருந்த போதும், அறவிட நடவடிக்கை எடுக்கபபடவில்லை.

**2.2.5 ஏனைய வருமானம்**

**(அ) நீர் கட்டணம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 1,792,586 ஆனதுடன், ஆண்டினுள் பில் இடல் ரூபா 3,116,020 ஆனது. அவற்றில் ஆண்டினுள் நிலுவையிலிருந்து ரூபா 690,423 மற்றும் பில் இடப்பட்டலிருந்து ரூபா 2,341,282 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு இறுதியில் மொத்த நிலுவை ரூபா 1,883,222 ஆனது.

**(ஆ) விளம்பரப் பலகை கட்டணம்**

சபை அதிகார எல்லையில் விளம்பரப் பலகை காட்சிப்படுத்தலுக்காக அறவிட வேண்டிய ரூபா 33,750 மற்றும் பல நிருவனங்களில் காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரங்களிலிருந்து கட்டணம் அறவிடப்படவில்லை.

**2.2.6 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பெறவேண்டியிருந்த நீதிமன்ற தண்டபணம் ரூபா 770,958 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,321,650 ஆனது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் பொது நலன், வசதிகள் மற்றும் நலன் புரி போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

**(அ) செயற்படுத்தாத நடவடிக்கைகள்**

சபை அதிகார எல்லையினுள் பொது மக்களின் சுகாதார நிலை மற்றும் பொது சேவைகளை மேன்படுத்தவது பிரதேச சபையொன்றினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான நடவடிக்கையான போதும், கால்வாய் தொகுதியினை சுத்தம் செய்தல் மற்றும் நகரை சுத்தம் செய்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்படவில்லை.

**(ஆ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

சபைக்கு சொந்தமான 2 உத்தேச நீர் விணியோகத் திட்டங்கள் ரூபா 2,114,719 செலவில் பழுதுபார்க்கப்பட்ட போதும், மீளாய்வாண்டினுள் 21 புதிய வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே புதிதாக நீர் விணியோகம் வழங்கப்பட்டிருந்தன.

**(இ) எதிர்பார்த்த விளைவுகளை (out come) பெற்றுக் கொள்ளாமை**

---

செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 2 வேலைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 15,163,083 செலவிட்டு எதிர்பார்த்த வெளியீட்டு மட்டதினை (out put) அடைந்திருந்த போதும், எதிர்பார்த்த விளைவினை (out come) அடைந்துகொள்ளவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| செயற்பாடுகள் | 2017 டிசம்பர் 31 வரை மேற்கொண்ட செலவு ரூபா | அவதானங்கள் |
|---|---|---|
| ---------------- | ----------------------------- | ----------------------- |
| பல நோக்குக் கட்டிடம் | 14,463,083 | புரநெகும கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பல நோக்குக் கட்டிடத்தில் பொது நூலகம், தகவல் பொழிநுட்ப நிலையம், சுகாதார மத்திய நிலையம், மாதர் மற்றும் ஆயர்வேத மத்திய நிலையம் மேலும் சன சமூக நிலையம் என்பன நிருவப்பட உத்தேசிக்கப்பட்ட போதும், அவைகள் நிருவப்பட்டிருக்கவில்லை. இக் கட்டிடத்தின் கீழ் மாடி மற்றும் இரண்டாம் மாடி எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது பயனற்று நிலவின. |
| | | |
| ஹசளக கொலொங்கொட வாராந்த சந்தை | 700,000 | வியாபாரிகளின் தேவைகளை கருத்திற் கொள்ளாது மொத்த வியாபாரச் சந்தையின் ஒரு புறத்தில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை. மேலும் வாராந்த சந்தைக்கருகில் பொது மலசலகூடம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதும், பயன்படுத்தப்படவில்லை. |
| | | |
| | ------------------<br>15,163,080<br>======== | |

**(ஈ) நடைமுறைப்படுத்தப்படாத வேலைகள்**

---

மீளாய்வாண்டினுள் 05 நடவடிக்கைகளை செயற்படுத்த ரூபா 160,000 ஆன ஒதுக்கீடு பெறப்பட்ட போதும், கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**(உ) கழிவுப் பொருள் முகாமை**

---

சபை அதிகார எல்லையினுள் தினத்தோறும் ஒன்று சேறும் ஒரு டொன் அளவான கழிவுப் பொருட்களை உக்களடையும் மற்றும் உக்களடையாதவை என பிரித்து ஹசளக இயற்கை பசளை கொட்டில்களிற்கு எடுத்துச் செல்லப்பட்டு உக்களடையும் கழிவுப் பொருட்கள் துண்டு முறைப்படி இயற்கை பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், உக்களடையாத கழிவுப் பொருட்கள் அவ்வளவில் ஓர் இடத்தில் குவிக்கப்பட்டு சூழலிற்கு பாதிப்பு ஏற்படம் வகையில் இடப்பட்டிருந்தன. இயற்கை பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதும், விற்பனை செய்வதற்காக முறையான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படாததனால் பெறுமளவு இயற்கை பசளை குவிக்கப்பட்டிருந்தன. கழிவுப் பொருள் முகாமைக்காக கருத்திட்ட வளவில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்ததுடன், அங்கு

சபையின் ஒதுக்கப்பட்ட பொருட்கள் மற்றும் வாகனமொன்றும் இடப்பட்டிருந்தன. கொலொங்கொட வாராந்த சந்தையில் ஒன்றுசேரும் கழிவுப் பொருட்கள் பக்கத்திலுள்ள காணியொன்றில் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் குவிக்கப்பட்டிருந்தன.

**(ஊ) சுற்றாடல் பிரச்சினைகள்**

உக்களடையாத கழிவுப் பொருட்களிற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததுடன், கழிவுப் பொருட்கள் கருத்திட்டத்திற்கு அருகிலுள்ள திறந்த வெளியில் எரிக்கப்பட்டிருந்தன. எரிகருவியொன்று இல்லாத காரணத்தால் சுற்றாடல் மாசடைந்து கொண்டிருந்தது.

**(எ) நிலையான அபிவிருத்தி இலக்கு**

சபையினால் நிலையான அபிவிருத்தி நோக்கின் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான வியாபாரக் கடடிடத்தொகுதியின் மேல் மாடி கடையறைகளை சபை நிர்மாணிக்காது கீழ் மாடி குத்தகைக் காரர்களுககே நிர்மாணிக்க சந்தர்ப்பம் வளங்கப்பட்டிருந்துடன், இங்கு டென்டர் நடைமுறைகளை பின்பற்றாததைப் போன்றே ஒரே முறையில் பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் மொத்த நீர் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 1360 ஆனது. அவற்றில் 433 வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே நீர் மாணி பொறுத்தப்பட்டிருந்ததுடன், மீதி 927 வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா 200 ஆன நிலையான கட்டணம் அறவிடப்பட்டிருந்தன.

(இ) 2015 ஆண்டு பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்சித் திட்டத்திற்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,315,810 ஆன பணத்தை எதிர்பாத்த பயன்பாட்டை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்காது பொது வைப்புக் கணக்கில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 ஒக்டோபர் மாதம் சபையினால் ஹசளக புத்தகசாலைக்காக ரூபா 131,110 பெருமதியான 460 புத்தகங்களை கௌ்வனவு செய்து 4 மாதங்கள் கடந்திருந்த போதும், அப் புத்தகத் தொகுதியை வாசகர்களின் பயன்பாட்டிற்கு வழங்கியிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமை**

**ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணிக்கிடையில் 6 பதவிகளில் 18 ஊழியர் வெற்றிடங்களும், ஒரு பதவியில் 02 ஊழியர் மிகையும் நிலவின.

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹசளகயில் 20 கடையறைகள் நிர்மாணிக்கப்பட்ட காணியை சுவீகரித்திருக்காததுடன், கடை அறைகளிலிருந்து அறவிடும் குத்தகையை கூட முறையாக அறவிடாததன் காரணமாக 2016 டிசம்பர் 31 திகதி வரை 32 கடை அறைகளிலிருந்து ரூபா 3,378,227 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தன.

(ஆ) ஒப்பந்தம் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்ட 4 கடை அறைகளை வியாபார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாது, வசிப்பிடமாக பயன்படுத்தப்பட்டன.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

பழைய நீதிமன்றக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் எல்லை வேலியினை இட்டு பாதுகாக்காத காரணத்தால் இக் கட்டிடம் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது.

**3.5.2 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ளாமை.**

மொறயாய புதிய வியாபாரக் கட்டிடத் தொகுதியின் 5 கடை அறைகள் மூடப்பட்டிருந்ததுடன், 4 கடை அறைகளில் 2017 டிசம்பர் 31 திகதியன்று ரூபா 5,880 ஆன நிலுவை வாடகை நிலவியது.

**3.5.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

மீளாய்வாண்டில் ரூபா 529,764 செலவில் நிர்மாணிக்கப்பட்ட உடவெல வாராந்த சந்தை வளவிலுள்ள பொது மலசலகூடத்தை சுவீகரிக்க சபையினால் நடவடிக்கை எடுக்கபபடவில்லை.

**3.5.4 விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

மத்திய மாகாணசபையினால் வழங்கப்பட்ட ரூபா 1,500,000 பெறுமதியான கெப் வண்டியை எஸ்கீஸ் கட்டளையினூடாக இரத்துச் செய்திருந்ததுடன், வண்டி சபை வளவில் துருப்பிடித்துக் கொண்டிருந்தது.

**3.5.5 வருடாந்த மெய்மையாய்வு**

2017 பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கையின் படி 4 வாசிகசாலைகளில் ரூபா 20,245 பெறுமதியான 132 புத்தங்களின் குறையொன்று நிலவியது.

**3.6 பெறுகைகள்**

**3.6.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதும் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பெறுகைகள் திட்டத்திற்குட்படாத கொள்வனவுகளும் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிற்கிடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 31 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 2,896,000 ஆன ஏற்பாட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 10 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட ரூபா 3,082,000 ஆன வருமானத்தில் எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

1988 (நிதி மற்றும் நிர்வாகம்) ஒழுங்கு விதிகளின் 5 (7) விதி பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிருவப்பட்டிருந்த போதும், உள்ளகக் கணக்காய்விற்கு மேலதிகமாக வவுசர் பரிசீலித்தல், கால அறிக்கை தயாரித்தல் போன்ற சாதாரண அலுவலக நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டதனால் உள்ளகக் கணக்காய்விற்கு காணப்பட்ட சந்தர்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றன.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | காணி மற்றும் கட்டிடங்கள் ஆய்வு செய்யப்படாமை. |
| | | (ii) | சில நிலையான சொத்துக்களை எவ்வித பயனுள்ள நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தி இருக்காமை. |
| (ஆ) | கணக்கீடு | (i) | நிர்மாணங்கள் மூலதனமாக்கப்படாமை. |
| | | (ii) | சில கணக்கு மீதிகள் தீர்க்கப்படாது நிலவின. |
| | | (iii) | கடன்கொடுனர் கடன்படுனர் மீதிகள் குறைத்து கணக்கிடப்பட்டுள்ளமை. |
| (இ) | வாகன கட்டுப்பாடு | (i) | லொக் குறிப்புப் புத்தகம் மற்றும் தின ஓட்டக் குறிப்புப் புத்தகம் பராமரிக்கப்படாமை. |
| (ஈ) | வருமான கட்டுப்பாடு | (i) | வியாபாரக் கட்டிடத் தொகுதிகளில் கடையறை மதிப்பீடு நடைமுறைப்படுத்தப்படாமை. |
| | | (ii) | காலத்திற்கேற்ப வீத வரி குத்தகை மதிப்பிடப்படாமை. |
| | | (iii) | வியாபார நிருவனங்கள் தொடர்பாக வருட ஆரம்பத்தில் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமை. |
| | | (iv) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | | (v) | சுற்றாடல் அனுமதிப்பத்திரமின்றி வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்லல். |
| (உ) | கடண்பட்டோர் மற்றும் கடண்கொடுத்தோர் | (i) | கடன்பட்டோர் மீதிகள் அறவிடலுக்கு நடவடிக்கை எடுக்காமை. |

(ii) வேலைக் கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(ஊ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(iii) நிர்மாணங்களுக்காக டென்டர் நடைமுறை பின்பற்றப்படாமை.

(ii) சமுதாய அடிப்படை சங்கங்களுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தேசங்கள் அனுகூலமற்ற மட்டத்தில் நிலவின